1979 ஏப்ரல் 27]

(ஆ) ஆம் எனில் அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்:—

(அ) 13—12—78 முதல் பதவி காலியாக இருந்து வந்தது.

(ஆ) மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் தற்காலிக நியமனத்திற்கான தேர்ந்த பெயர்ப்பட்டியல் மீதான அரசாணை ஒன்று 30—3—79-ல் வெளியிடப்பட்டு, 9—4—1979 முதல் நீலகிரி மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பதவி நிரப்பப்பெற்றுள்ளது.

உள்ளாட்சிப் பகுதிகளில் மின் விளக்குகள் பராமரிப்பு

*வினா எண். 851—திரு. யா. சை. மு. யூசுப், திரு. எச். ஜி. ஆறுமுகம், திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்பொழுது ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களின் மின்விளக்கு பராமரிப்பு அந்தந்த ஊராட்சியிடம் தரப்பட்டு உள்ளதால் மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை என அரசிடம் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதை மறு பரிசீலனை செய்து முன்பு போல மின் வாரியத்திடம் ஒப்படைக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:—

(அ) ஆம்.

(ஆ) மறு பரிசீலனை செய்ததில், ஊராட்சிகளே தொடர்ந்து மின் விளக்குகளைப் பராமரிக்க வேண்டும் என முடிவெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து பேரூராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் பல்பு, டியூப் லைட்கள் வழங்கப்படுகிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியில் ஊத்தங்கரை ஒன்றியத்தில் மாத்தூர் பஞ்சாயத்தில் பலமுறை கேட்ட பின்னாலும் பல்பு, டியூப்கள்கொடுக்கப்படவில்லை. அப்படியே கொடுத்தாலும் மின்சார வாரியத்தில்

இருக்கிறவர்கள் அந்த பல்ப, டியூப்களை பொருத்த வேண்டுமென்று சொன்னால் அதற்கு.8 அணா, ஒரு ரூபாய் வசூல் செய்து கொடுக்க வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியத்திலே சொல்லப்படுகிறது. ஆனால் மின்சார வாரியத்தில் இருக்கிற தொழிலாளர்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் சொல்வதை கேட்பதில்லை. அதனால் பல மாதங்களாக பல்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இதை மறு பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது போன்ற புகார்களின் அடிப்படையில்தான் 21-3-1979 ஆம் தேதியன்று ஒரு புதிய ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது எப்படி செயல்படுகிறது என்பதைப் பார்த்த பிறகு மீண்டும் பரிசீலிக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊராட்சி, பேரூராட்சி மன்றங்களில் மின் விளக்குகள் பராமரிப்பு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதை மீண்டும் பரிசிலனை செய்வதாகவும் 21—3—79 அன்று ஒரு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், ஊராட்சி ஒன்றியங்கள் ஆனாலும் சரி, பேரூராட்சிகள் ஆனாலும் சரி, அல்லது நகரசபையே ஆனாலும் சரி அந்த உத்தரவு வந்து சேரவில்லை, நாங்கள் ஒன்றும் செய்ய முடியாது என்று மறுத்து விடுகிறார்கள் என்பது பற்றி அரசுக்குத் தெரியுமா, அது பற்றி புகார்கள் வந்திருக்கிறதா, அதைக் குறித்து அரசு என்ன செய்யவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது பற்றிய உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சட்டமன்றத்திலும் மேலவையிலும் தெரிவிக்கப் பெற்றுள்ளன. உத்தரவு அவர்களுக்கு சென்று சேருவதற்கான எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி சேரவில்லை என்றால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றியங்களிலும் சரி, பஞ்சாயத்துகளிலும் சரி, தெருக்களில் லைட்டே எரிவதில்லை. அதற்காக பஞ்சாயத்துக்களில் என்ன ஏற்பாடு செய்யப்படுகிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே அதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

1979 ஏப்ரல் 27]

டாக்டர் தே. சமரசம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலும், பேரூராட்சி ஒன்றியங்களிலும் தரக் கூடிய மின்சார சாதனங்கள் தரம் அற்றவையாக இருக்கின்றன என்பது பற்றி சர்க்காருக்கு தெரியுமா? அப்படியானால் நல்ல தரமான சாதனங்கள் தருவதற்கும், தெரு விளக்குகள் அடிக்கடி கெட்டுப் போய் விடுவதை ரிப்பேர் செய்வதற்கும், இந்த காலத் திற்குள் அதை ரிப்பேர் செய்து முடிக்க வேண்டும் என்ற அள வுக்கு உத்தரவுகள் பிறப்பிக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இதையெல்லாம் அரசு பரிசீலிக்கும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர் களே, ஊராட்சிகளிலும் சரி, பஞ்சாயத்துக்களிலும் சரி தெருக் களில் லைட் எரிவது கிடையாது. பஞ்சாயத்துக்களில் கொடுக்கக் கூடிய நிதி ஒதுக்கீட்டிலே நிர்வாக செலவிற்காக பெரும்பகுதி போய்விடுகிறது. அதனால் மராமத்து செலவுகளுக்கு பணம் போதவில்லை என்று சொல்கிறார்களே, அவர்களுக்கு பணம் ஒதுக்கீடு செய்யும்போது எத்தனை சதவீதம் நிர்வாக செலவிற்கு ஒதுக்கப்படுகிறது, எவ்வளவு சதவீதம் பராமரிப்பு செலவிற்கு ஒதுக்கப்படுகிறது; அதற்குரிய பஞ்சாயத்து சட்டப்படி நிர்வாக செலவிற்கு எவ்வளவு ஒதுக்கப்பட வேண்டும் என்று சொன்னால் பராமரிப்பு செலவுக்கு தனியாக ஒதுக்கப்படலாமே, இவைகளை பற்றியெல்லாம் விரிவாக விளக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தனிக் கேள்வி போட்டால் விரிவாக பதில் தயாரித்து கொடுக்கப்படும்.

புதுக்கடை சந்தைக் குடிநீர் தேக்கத் தொட்டி.

*வினா எண். 852.—திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முன்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் புதுக்கடை சந்தை யினுள் பல்லாயிரக்கணக்கான ரூபாய் செலவு செய்து குடிநீர் வசதிக்காக தோண்டப்பட்ட கிணறும், குடிநீர் தேக்கும் மேல் நிலைத் தொட்டியும் பயனற்றுப் போயுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இந்தக் குடிநீர் திட்டத்தை மீண்டும் செயல் படுத்த அரசு என்ன திட்டமிட்டுள்ளது?